
# திராவிடத்தால் வாழ்கிறோம்

950

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிபுல்லா

27

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தன் இன்னுயிரை ஈந்தவர் மொய்தீன் பிச்சை என்றால், தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இந்த இயக்கத்துக்காக அர்ப்பணித்தவர் மறைந்த முன்னோடி நாகூர் இ.எம்.ஹனிபா. முத்தமிழறிஞர் கலைஞரை விட ஒன்றரை வயது இளையவர். ஆனால், கலைஞரைப் போல சுயமரியாதை இயக்கத்தின் வழிவந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை அடைந்த சுயமரியாதைச் சுடரொளி. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என திராவிட இயக்கத்தின் முப்பெரும் தலைவர்களோடும் அணுக்கமாக இருந்தவர்களில் ஹனிபா முக்கியமானவர். அவரது வாழ்வும், தி.மு.க.வின் வரலாறும் பிரிக்க இயலாத அளவுக்கு இரண்டறக் கலந்தது.

## கொள்கையே உருவான ஹனிபா


1935-ஆம் ஆண்டில், நாகூர் ஹனிபாவின் தந்தை முகமது இஸ்மாயில் மலேசியாவின் கோலாலம்பூரில் பணிபுரிந்து வந்தார். அப்போது, நாகூர் ஹனிபாவுக்கு 10 வயது. **‘சைபுல் இஸ்லாம்’, ‘தாருல் இஸ்லாம்’, ‘குடி அரசு’** எனப் பல்வேறு இதழ்களை வாங்கி, கப்பலில் தனது தந்தைக்கு அனுப்பி வைப்பது அவரது கடமை. அனுப்பி வைக்கும் முன்னே, அனைத்து இதழ்களையும் வாசித்துவிடுவது அவரது வழக்கம். அந்த வாசிப்புப் பழக்கம் தந்த உந்துதல்தான், 1939-ஆம் ஆண்டில் முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று, நாகூர் ஹனிபாவை சிறைசெல்ல வைத்தது. அப்போது அவருக்கு வயது 13.

அதற்கு முன்னரே 1938- ஆம் ஆண்டு, மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை தஞ்சை ஜில்லாவில் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றார் பெரியார். கூத்தாநல்லூரில் ‘மீலாது விழா’, மன்னார்குடியில் பொதுக்கூட்டம், திருபுவனத்தில் முஸ்லிம் லீக் மாநாடு, அய்யம்பேட்டையில் சுயமரியாதை மாநாடு, திருவாரூரில் நீதிக்கட்சிக் கூட்டம், மயிலாடுதுறையில் முஸ்லிம் லீக் மாநாடு, கும்பகோணத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம், வவ்வலாடியில் முஸ்லிம் லீக் பொதுக்கூட்டம், மயிலாடுதுறையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் எனத் தொடர்ச்சியாக பெரியார் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் தனது இருப்பையும் உறுதி செய்துள்ளார். அந்தக் கூட்டங்களில் , திராவிட இன உணர்வை ஊட்டும் பாடல்களைப் பாடி இருக்கிறார் ஹனிபா. குறிப்பாக, பாரதிதாசன் அவர்களின் ‘சங்கே முழங்கு’ பாடலைப் போராட்ட மேடைகளில் பாடுவார்.

நாகூர் ஹனிபாவின் பாடல்களைக் கேட்டு பிடித்துபோன, பெரியார், ரொக்க அன்பளிப்பு கொடுத்திருக்கிறார் என்பது வியப்பளிக்கும் தகவல். பெரியாரை, நாகூருக்கு அழைத்தும் கூட்டங்கள் நடத்தி இருக்கிறார் ஹனிபா. அப்படி சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் வார்க்கப்பட்ட ஹனிபா, திராவிட முன்னேற்றக் கழகம் உருவானபோது, அண்ணாவோடு தன்னை இணைத்துக் கொண்டார்.

## தி.மு.க.வில் களப்பணி

1953-ஆம் ஆண்டில் நூல் தட்டுப்பாடு, இயந்திரமயமாக்கலின் தொடக்கம் போன்ற காரணங்களால் கைத்தறி நெசவாளர்கள் கடும் தொழில் நெருக்கடிக்கு ஆளாகினர். கஞ்சித் தொட்டிகள் திறக்கப்படும் அளவுக்கு அக்காலகட்டத்தில் நெசவாளர்களின் வாழ்க்கை நிலை மோசமானது. கைத்தறித் துணிகளை விற்று, நெசவாளர் துயர் துடைக்கும் முயற்சியில் தி.மு.கழகத்தை ஈடுபடுத்தினார் பேரறிஞர் அண்ணா. முதற்கட்டமாக, திருச்சியில் அண்ணாவே நேரடியாகச் சென்று கைத்தறித் துணிகள் விற்பனையில் ஈடுபட்டார். திருச்சி, தெப்பக் குளம் பகுதியில் நடைபெற்ற விற்பனையின் போது, நாகூர் ஹனிபாவும் உடனிருந்தார். தனது கம்பீரக் குரலில் ஹனிபா ஒலிபெருக்கி இல்லாமலேயே பாடி, கைத்தறித் துணிகள் விற்பனையில் ஈடுபட்டார். “அய்யா ஹனிபாவுக்கு ஒலிபெருக்கி தேவையே இல்லை” என்று சுயமரியாதை இயக்கத்தில் இருந்தபோதே, பெரியார் அவரைப் பாராட்டியுள்ளார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.



# கழகத்துக்கு ஆயுதமான நாகூர் ஹனிபா பாடல்கள்!

**“பேரறிவாளர் அவர் பெரியார்**
**என்னும் ஈ.வெ.ரா.**
**தூங்கிக்கிடந்த உன்னைத் தூக்கித்**
**துடைத்தணைத்து**
**தாங்கித் தரைமேல் இட்டார்.**
**தமிழர் தாத்தாவாம் ஈ.வெ.ரா-வே!”**

என்று நாகூர் ஹனிபா பாடிய பாடல்தான் பெரியார் பற்றி முதன்முதலில் இசைத்தட்டில் பதிவு செய்யப்பட்ட பாடல். அதுபோல அண்ணாவின் புகழைப் பட்டிதொட்டியெங்கும் பாடல் வழியாக ஒலிக்கச் செய்தவரும் நாகூர் ஹனிபாதான். 1955-ஆம் ஆண்டு, ‘நம் நாடு’ இதழில் ‘அழைக்கின்றார் அண்ணா’ பாடல் பிரசுரமாகியிருந்தது. அந்தப் பாடலுக்கு நாகூர் ஹனிபா இசையமைத்துப் பாடிட, பட்டிதொட்டியெங்கும் தீயாய் பரவியது. அந்த ஆண்டில் அதிகம் விற்பனையான இசைத்தட்டு என்ற பெருமையையும் பெற்றது.

> “இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, மேடைதோறும் இசைமுழக்கம் செய்தவர் ஹனிபா” எனக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

## ஓடி வருகிறான் உதயசூரியன்!

தி.மு.கழகத்தின் முதல் மாநில மாநாடு தொடங்கி, பல மாவட்ட மாநாடுகள், மாநில மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் நாகூர் ஹனிபாவின் இன்னிசை நிகழ்ச்சி கட்டாயம் இடம் பெறும். அவருடைய இன்னிசைக்காகவே தனிக்கூட்டம் வரும் அளவுக்கு முத்திரை பதித்தார். அப்படி, தனது இசையால் தமிழர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி ஈர்த்த ஹனிபாவுக்கு, 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நாகை தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்தார் அண்ணா. அப்போது நாகூர் ஹனிபா பாடிய பாடல்தான் **‘ஓடி வருகிறான்,** உதயசூரியன்’ பாடல். தி.மு.க. தொண்டனின் உணர்வுகளைத் தட்டியெழுப்ப, இன்றுவரை இந்த ஒற்றைப்பாடல் போதுமானது என்ற அளவுக்கு, தி.மு.க.வின் இதயகீதமாக மாறியது அந்தப் பாடல்.

1961-ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து ஈ.வெ.கி. சம்பத் வெளியேறி, தமிழ் தேசியக் கட்சியை உருவாக்கியிருந்தார். கண்ணதாசனும் தி.மு.க.வில் இருந்து விலகினார். இருவரையும் விமர்சிக்கும் வகையில், பாடல் ஒன்றை எழுதி தருமாறு, உள்ளூர் கவிஞர் நாகை சலீமிடம் கேட்டார் ஹனீபா. ‘வளர்த்த கடா, மார்பில் பாய்ந்ததடா’ என்ற அந்தப் பாடல், தி.மு.கழகத்துக்கு துரோகம் இழைத்தோருக்கு எக்காலமும் பொருந்தும் பாடலானது. 70, 90 களில் தி.மு.க.வில் பிளவுகள் ஏற்பட்டபோதும், தி.மு.க. தொண்டர்கள் ஆயுதமாகவே இப்பாடலை ஏந்தினர் என்பது வரலாறு.

மேடைகளில் மட்டும் கொள்கை முழங்கவில்லை. கழகத்தின் அத்தனைப் போராட்டங்களிலும் பங்கெடுத்தவர். “குரல் வழிப் பங்களிப்பு என்பது கழகத்துக்குக் கூடுதல் திறமையாகப் பயன்பட்டது. நான் கச்சேரிக்காரன் அல்ல; கட்சிக்காரன்” என ஹனிபா கூறியிருக்கிறார்.

கழகத்தின் அத்தனை வளர்ச்சிப் படிநிலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். “பெரியார் பெயரை உச்சரித்தால், அண்ணாவின் பெயரைச் சொன்னால் ஒருவித முகக்கோணலுடன் சமுதாயத்தில் பலர் பார்த்து ஒதுக்கிய நேரத்தில், அவர்களின் பெயரைச் சொன்னால் பிழைக்கவே முடியாது எனும் அச்சுறுத்தல் ஆட்டிப் படைத்த நேரத்தில், இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, மேடைதோறும் இசைமுழக்கம் செய்தவர் ஹனிபா” எனக் குறிப்பிடுகிறார் கலைஞர். இருவருக்குமான தோழமை உணர்வைச் சொல்லவேண்டுமெனில், ‘அதுதான் சிறுபான்மையினருடன் கழகம் கொண்டிருக்கும் பிணைப்பு’ என்பதாக இருக்கும்.

...நீளும்

## உலகம் சுற்றும் திராவிடம்!

திராவிட இயக்கங்கள் கொண்டாடும் சிறப்பு மாதம் செப்டம்பர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தி.மு.க. தொடக்க நாள் ஆகியவை செப்டம்பர் மாதத்தில் வருவதுடன், அதையொட்டி, கழகத்தின் முப்பெரும் விழா கொண்டாட்டமும் செப்டம்பர் மாதத்தைச் சிறப்பாக்குகின்றன. அத்தகைய சிறப்புக்குரிய மாதத்தை ‘திராவிட மாதம்’ எனக் கொண்டாடி வருகின்றனர், திராவிடச் சிந்தனை மரபைத் தொடர்பவர்கள்.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குக் கூடுதல் சிறப்பாக, ஐரோப்பிய கண்டத்துக்குச் சென்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று (செப்டம்பர் 4) இங்கிலாந்தில் உலக புகழ்பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியாரின் உருவப்படத்தைத் திறந்து வைக்கிறார்.

இந்தக் கொண்டாட்டங்களை ‘ஸ்பார்க் மீடியா’ இணையதளத்தில் தொடர் கட்டுரையாகப் பதிவு செய்து வருகிறார் பத்திரிகையாளர் கோவி.லெனின். குறிப்பாக, திராவிட இயக்கத் தலைவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து, இந்த மாதம் முழுவதும் எழுத உள்ளார்.

இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உரையாற்றிய நீதிக்கட்சித் தலைவர் டி.எம்.நாயரில் தொடங்கி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட பல திராவிடத் தலைவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள், சமூக நீதியின் அடித்தளத்தை வலுப்படுத்தி, சமூக நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தத் துணை நின்றுள்ளன. உலகம் முழுவதும் திராவிடத்தைச் சுமந்து சென்ற அந்தப் பயணங்கள்தான் தமிழ்நாட்டைப் பல இலக்குகளில் உலகத் தரத்துக்கு உயர்த்தியுள்ளன. அந்த வரலாற்றை அறிந்துகொள்ள வாசிப்போம் ‘உலகம் சுற்றும் திராவிடம்’.

## ஃப்ளாஷ்பேக்



### மணவிழா அழைப்பும் - பிறந்த நாள் வாழ்த்தும்!



எஸ்.திருநாவுக்கரசு

2019-ஆம் ஆண்டு, இறுதியில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சகோதரர் எஸ்.சுரேந்திரன் திருமணத்தை இளைஞர் அணிச் செயலாளர் வருகை தந்து நடத்திட அழைப்பு வைக்க வந்திருந்தோம். அவரை சந்தித்த பின், அண்ணா அறிவாலயத்தில் தலைவரை சந்தித்து, எனது பிறந்த நாளுக்கு வாழ்த்து பெற்றேன். தலைவர் வாழ்த்தி அனுப்பியது மகிழ்ச்சியான நினைவு.

**– எஸ்.திருநாவுக்கரசு,**
**இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர்,**
**கரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கருப்புக் கொடியுடன் கைது!

1958-ஆம் ஆண்டு சென்னை வருகை தந்த, பிரதமர் நேருவுக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தின்போது, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போலீஸ் தாக்குதலில் காயமடைந்தனர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். அரசின் இந்த அடக்குமுறையைக் கண்டித்து, நாடெங்கும் மீண்டும் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தியது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.